# யோகக் கலையை வழங்கிய ரிஷிகளையும் சித்தர்களையும் ஈன்ற தமிழகத்தால் தேசம் பெருமை அடைகிறது: ஆளுநர் ஆர்.என்.ரவி




யோசா செய்த ஆளுநர் ஆர்.என்.ரவி

**சிதம்பரம்:** யோகா கலையை வழங்கிய ரிஷிகளையும் சித்தர்களையும் ஈன்ற புண்ணிய பூமி தமிழகத்தால் தேசம் பெருமை அடைவதாக ஆளுநர் ஆர்.என்.ரவி தெரிவித்தார்.

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இளைஞர்கள் மற்றும் யோகா பயிற்சியாளர்களுடன் ஆளுநர் ஆர்.என். ரவி மற்றும் அவரது மனைவி லட்சுமி ரவி ஆகியோர் யோகாசனம் செய்தனர். இந்நிகழ்வில் பங்கேற்ற கலைஞர்கள் பல்வேறு யோகாசானங்களை செய்தனர்.

இது தொடர்பாக ஆளுநர் ஆர்.என்.ரவி தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்," தனிநபர்கள் மற்றும் கூட்டுச்சமூகத்துக்கு முழு உடல், மனம் சார்ந்த நலனை வழங்கும் அறிவியலான யோகா கலையை வழங்கிய பதஞ்சலி, திருமூலர் போன்ற மாபெரும் ரிஷிகளையும் சித்தர்களையும் ஈன்ற புண்ணிய பூமி தமிழகத்தால் தேசம் பெருமை அடைகிறது. யோகாவை உலகுக்கு பரப்பிய பிரதமர் மோடிக்கு நன்றி." இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

# இரவில் பெண்கள் பாதுகாப்புக்கு தமிழக காவல் துறை புதிய திட்டம்: உதவி எண்கள் அறிவிப்பு



**சென்னை:** இரவு 10 மணி முதல் காலை 6 மணி வரை தனியாக பயணிக்க பாதுகாப்பு குறைவு என நினைக்கும் பெண்கள், காவல் துறையின் உதவி எண்களான **1091, 112, 004 -23452365** மற்றும் **044-28447701** ஆகியவற்றை அழைக்கலாம் என்று தமிழக காவல் துறை டிஜிபி சைலேந்திரபாபு அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக தமிழக காவல் துறை டிஜிபி சைலேந்திரபாபு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: பெண்கள் பாதுகாப்புக்கு என புதிய திட்டம் ஒன்றை தமிழக காவல் துறை அறிமுகப்படுத்தியுள்ளது. இரவு 10 மணி முதல் காலை 6 மணி வரை தனியாக பயணிக்க பாதுகாப்பு குறைவு என நினைக்கும் பெண்கள், காவல்துறையின் உதவி எண்கள் 1091, 112, 004 -23452365 மற்றும் 044-28447701 ஆகியவற்றை அழைக்கலாம்.

காவல் ரோந்து வாகனம் நீங்கள் இருக்கும் இடத்துக்கே வந்து உங்களை பாதுகாப்பாக அழைத்துச் செல்லும். அனைத்து நாள்களிலும் இந்த சேவையை பயன்படுத்திக் கொள்ளலாம். இந்த சேவை இலவசமாகும் என்று அதில் தெரிவித்துள்ளார்.

## மதுரையில் தேசிய நோய்த் தடுப்பு திட்டத்தில் கால்நடைகளுக்கு ‘புருசெல்லா’ நோய் தடுப்பூசி



தகுந்த பாதுகாப்பு கவசங்களுடன் மதுரை விளாச்சேரி கால்நடை மருந்தகத்தில் புருசெல்லா நோய்த் தடுப்பூசியை கன்றுக்குட்டிக்கு செலுத்தும் உதவி மருத்துவர் சிவக்குமார்

**மதுரை:** கால்நடைகளிடம் இருந்து ‘புருசெல்லா’ நோய் மனிதர்களுக்கு பரவும் என்பதால், கால்நடைகளைக் காக்கும் வகையில் தேசிய நோய்த் தடுப்பு திட்டத்தில் 2-வது சுற்று தடுப்பூசி செலுத்தும் பணி கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் மதுரை மாவட்டத்தில் நடந்து வருகிறது.

கால்நடைகளிலிருந்து மனிதர்களுக்கு பரவும் புருசெல்லா எனும் நுண்ணுயிர் கிருமியால் புருசெல்லா நோய் (கன்று வீச்சு) ஏற்படுகிறது. புருசெல்லா நோயால் உலகம் முழுவதும் ஆண்டுதோறும் சுமார் 5 லட்சம் பேர் பாதிக்கப்படுகின்றனர். இந்நோய் மனிதர்களின் மூட்டு மற்றும் நரம்பு மண்டலத்தை பாதித்து உயிரிழப்புகளை ஏற்படுத்தும்.

புருசெல்லா நோய் பாதித்த கால்நடைகள் உணவு உட்கொள்ளாமல் இருக்கும், பால் உற்பத்தி குறையும், சினை பிடிக்காமல் இருக்கும், கன்று வீச்சு மற்றும் விரை வீக்கமாக காணப்படும். எனவே, இதன் மூலம் ஏற்படும் பொருளாதார

இழப்பை தவிர்க்க 4 முதல் 8 மாத வயதுடைய பசு, எருமை கன்றுகளுக்கு தடுப்பூசி செலுத்தப்படுகிறது.

தடுப்பூசி செலுத்தும்போது தகுந்த பாதுகாப்பு முறைகளை பின்பற்றி தடுப்பூசி செலுத்தப்படுகிறது. ஒருமுறை தடுப்பூசி செலுத்தினால் ஆயுள் முழுவதும் கால்நடைகளை புருசெல்லா நோயிலிருந்து காப்பதோடு, மனிதர்களுக்கு பரவுவதையும் முற்றிலும் தடுக்கலாம்.

## உலகில் தனக்கான சரியான இடத்தை நோக்கி இந்தியா நகர்கிறது: பிரதமர் மோடி



**புதுடெல்லி:** மிக உயர்ந்த தகுதியுடன் இருக்கும் இந்தியா, உலகில் தனக்கான சரியான இடம் எதுவோ, அதை நோக்கி நகர்கிறது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா செல்வதற்கு முன்பு ‘தி வால் ஸ்ட்ரீட் ஜார்னல்’ பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் பிரதமர் மோடி கூறியது: "அமெரிக்க மற்றும் இந்திய தலைவர்களுக்கு இடையே முன்னெப்போதும் இல்லாத நம்பிக்கை உள்ளது. இரு நாடுகளுக்கும் இடையேயான உறவு முன்னெப்போதையும் விட வலுவாகவும் ஆழமாகவும் இருக்கிறது. உலகில் தனக்கான இடம் எதுவோ அதை நோக்கி இந்தியா நகர்கிறது. மிக உயர்ந்த, ஆழமான, பரந்தபட்ட தகுதியை இந்தியா கொண்டிருக்கிறது. எந்த நாட்டையும் இந்தியா மாற்றுவதாக நாங்கள்

பார்க்கவில்லை. உலகில் தனக்கான சரியான இடத்தைப் பெறுவதை நோக்கி இந்தியா செல்கிறது என்பதாகவே பார்க்கிறோம்.

ஐக்கிய நாடுகள் சபை போன்ற உலகளாவிய நிறுவனங்கள் உலக ஒழுங்கில் இன்னும் பரந்த அளவில் பிரதிநிதிகளைக் கொண்டிருக்க வேண்டும். ஐநா பாதுகாப்பு கவுன்சிலின் தற்போதைய உறுப்பினர்கள் குறித்து புதிய மதிப்பீடு செய்யப்பட வேண்டும். ஐநா பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியா இருக்க வேண்டுமா என்பது குறித்து உலகம் கேட்க வேண்டும்.

சுதந்திர இந்தியாவில் பிறந்த முதல் பிரதமர் நான். அதனால்தான் எனது சிந்தனை செயல்முறை, எனது நடத்தை, நான் சொல்வது மற்றும் செய்வது, எனது நாட்டின் பண்புகள் மற்றும் மரபுகளால் ஈர்க்கப்பட்டு தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அதிலிருந்து நான் எனது பலத்தைப் பெறுகிறேன்.

ரஷ்யா - உக்ரைன் போரை பொறுத்தவரை, அனைத்து நாடுகளும் சர்வதேச சட்டத்தையும், நாடுகளின் இறையாண்மையையும் மதிக்க வேண்டும். தூதரகம் மற்றும் உரையாடல்கள் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்; போர் மூலம் அல்ல. நாங்கள் நடுநிலை வகிக்கிறோம் என்று சிலர் கூறுகிறார்கள். ஆனால், நாங்கள் நடுநிலை வகிக்கவில்லை. நாங்கள் அமைதியின் பக்கம் இருக்கிறோம். இந்தியாவின் முதன்மையான முன்னுரிமை அமைதிதான் என்பதில் உலகம் முழு நம்பிக்கை கொண்டுள்ளது. அமைதிக்காக இந்தியா, தன்னால் இயன்ற அனைத்தையும் செய்யும். மோதலுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கும், நிலையான அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதற்கும் அனைத்து உண்மையான முயற்சிகளுக்கும் இந்தியா ஆதரவளிக்கும்.

சீனா உடனான இருதரப்பு உறவு மேம்பட, எல்லைப் பகுதிகளில் அமைதி நிலவுவது அவசியம். இறையாண்மைக்கு மதிப்பளித்தல், பிராந்திய ஒருமைப்பாட்டுக்கு மதிப்பளித்தல், சட்டத்தின் ஆட்சியைக் கடைப்பிடித்தல், வேறுபாடுகள் மற்றும் சர்ச்சைகளை அமைதியான முறையில் தீர்த்துக்கொள்ளுதல் ஆகியவற்றில் எங்களுக்கு முக்கிய நம்பிக்கை உள்ளது. அதே நேரத்தில், இந்தியா தனது இறையாண்மை மற்றும் கண்ணியத்தை

பாதுகாக்க முழுமையாக தயாராக உள்ளது" என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

## தங்கம் வென்றார் இந்தியாவின் கீதாஞ்சலி




கீதாஞ்சலி நாக்வேகர்

**பெர்லின்:** சிறப்பு ஒலிம்பிக் உலக விளையாட்டு போட்டியில் 800 மீட்டர் ஓட்டத்தில் இந்தியாவின் கீதாஞ்சலி தங்கப் பதக்கம் வென்றார்.

சிறப்பு ஒலிம்பிக் உலக விளையாட்டு போட்டிகள் ஜெர்மனியில் உள்ள பெர்லின் நகரில் நடைபெற்று வருகின்றன. இதில் மகளிருக்கான 800 மீட்டர் ஓட்டத்தில் இந்தியாவின் கீதாஞ்சலி நாக்வேகர் தங்கப் பதக்கம் வென்றார். இவர், கோவா மாநிலத்தை சேர்ந்தவர்.

ஆடவருக்கான பளுதூக்குதலில் இந்திய வீரர் விஷால் 4 வெள்ளிப் பதக்கங்கள் வென்றார். அவர், ஸ்வாட் (122.50 கிலோ எடை), டெட்லிஃப்ட் (155), பெஞ்ச் பிரஸ் (85) ஆகிய பிரிவுகளில் அசத்தினார்.

ஒருங்கிணைந்த பிரிவிலும் விஷால் வெள்ளிப் பதக்கம் கைப்பற்றினார். 16 வயதான விஷால் புதுச்சேரி மாநிலத்தைச் சேர்ந்தவர் ஆவார்

EVA STALIN IAS